Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 92 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 11 (27-11-1991) புதன்கிழமை ஓசை: 282

## நவம்பர் 27 மாபெரும் மாவீரர் தேசிய விழா

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மாபெரும் மாவீரர் தேசிய விழா நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தினை ஆரம்பிக்கும் வகையில் தமிழீழக் காவல்துறை மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அணி வகுப்பும், மகளிர் படைப்பிரிவினர் அணிவகுப்பும் இடம் பெறும் இவ்வணிவகுப்பு திருநெல்வேலிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சிறப்புரை (6 ஆம் பக்கம் பார்க்க)

# எந்த சவாலையும் ஏற்கத் தயார்: உறுதிகொண்டு அணிதிரள்வோம்!

## மக்களுக்கு தலைவர் அழைப்பு

(நமது நிருபர்)

'இன்று நாம் எதிர் கொள்ளும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில், எதிரியின் எந்தச் சவாலுக்கும் நாம் முகம் கொடுக்கத் தயாராக வேண்டும்.'



'நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்டு, உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ, அழிக்கவோ முடியாது. விரசுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்' இவ்வாறு மாவீரர் நாள் தொடர்பாக தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழமக்களே இன்றையதினத்தைமாவீரர் நாளாக, தியாகிகளின் திருநாளாக, எமது தேசத்தின் பெருநாளாக நாம் கொண்டாடுகின்றோம்.

உயிரை அர்ப்பணித்த தியாகிகளை இன்று நாம் எமது இத

எமது மண்ணுக்காக, எமது மக்களுக்காக, தமது இன்னுயிர்களை [illegible] யத்து ஆலயங்களில் நினைவு கூர்ந்து கௌரவிக்கின்றோம்

## நினைவொலி எழுப்ப மாவீரர் நாள் ஆரம்பம்

(நமது நிருபர்கள்)

நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு மணியோசை எழுந்தது. வீடுகளிலும், வீதிகளிலும் ஏனைய இடங்களிலும் நின்ற மக்கள் அந்தந்த இடங்களிலேயே நின்று மௌன அஞ்சலி செய்தனர். இதனைத்தொடர்ந்து எங்கும் ஒளிமயம்! மாவீரச் சுடர்கள் பிரகாசித்தன மாவீரர் நாளின் ஆரம்பம் எழுச்சிமிகு அஞ்சலியாக அமைந்தது.

தமிழீழ மண்ணின் விடிவிற்காகத் தமது உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூரும் தேசியதினமான மாவீரர் நாள் இன்று ஆரம்பமாவதையிட்டு நேற்று நள்ளிரவும் பகல்போல் ஒளியேற்றப்பட்டு பிரகாசித்தது.

11.59 வரை அமைதி இரவாக இருந்த நேற்றைய இரவு 12 மணியானதும் அடித்தெழுந்ததுபோல எங்கும் மணி ஓசைகள் ஆரவாரித்தன. கோயில்களில் ஏற்கனவே நின்றவர்கள் மணியோசைகளை எழுப்பினர். பாடசாலைகளில் மாணவர்கள் காத்து நின்று மணி அடித்தனர். மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்திலும் தமி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மாவீரர் துயிலும் வீடுகளில் மாவீரர் நினைவு சுடரொளி

### கோப்பாயில் மகேந்திரராசா ஏற்றினார்

(யாழ்ப்பாணம்)

தேசவிடுதலைப் போராட்டத்தில் தியாகமரணமடை

துயிலும் இல்லத்தில் முதலாவது மாவீரர் நினைவுச் சுடரை விடுதலைப் புலிகள் மக்கள்

கான மாவீரர் துயிலும் இல்லங்களில் அவ்வப்பகுதிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களி

நாளாக, எமது தேசத்தின்- மக்களுக்காக, தமது இன்னு[illegible] கௌரவிக்கின்றோம்

# மாவீரர்கள் மகத்துவமானவர்கள்

ஒரு புனித இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்திற்காகப் போராடி, அந்த இலட்சியத்தை அடைவதற்காக தமது வாழ்வைத் தியாகம்செய்த இந்த மாவீரர்கள் மகத்துவமானவர்கள்.

இந்த மாவீரர்களது அற்புதமான இலட்சிய வாழ்க்கை, அவர்களது தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள் - இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கின்றது. எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால், வியர்வையால், கண்ணீரால்- எழுதப்பட்டது.

# நீண்ட கடினமான வரலாறு

எமது விடுதலை இயக்கம் மிகவும் நீண்ட, கடினமான நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தொடர்ந்து வருகின்றது. உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத சவால்களை, சோதனைகளை எதிர்பாராத திருப்பங்களை இந்த வரலாற்று ஓட்டத்தில் நாம்-எதிர்கொண்டோம்.

எமது போராட்டத்திற்கு எதிராகப் பல்வேறு விரோத சக்திகளும் துரோகசக்திகளும் இணைந்து செயற்பட்டன. எமது வரலாற்று எதிரியுடன் வலிமைமிகுந்த வல்லரசுகளும் எமக்கு எதிராக அணிசேர்ந்து கொண்டன. சதிகளாக, நாசசெயல்களாக, நம்பிக்கைத் துரோகங்களாக, ஏமாற்றுப் படலங்களாக எமது இயக்கம் பல நெருக்கடிகளை எதிர்கொண்டது. அலையலையாக எழுந்த எதிரியின் படையெடுப்புக்களை ஒருபுறமும், அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பை மறுபுறமாகவும் நாம் தனித்து நின்று எதிர்கொண்டோம். பல கட்டங்களில் எமது இயக்கம் அழிவின் விளிம்புக்குத் தள்ளப்பட்டது.

# உறுதியே சுதந்திரத்தின் தூண்கள்

புயலாக எழுந்த இந்தப் பேராபத்துக்களை எல்லாம் மலையாகநின்றுஎதிர்கொள்ள இரும்பை ஒத்த மன உறுதி தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியானவரலாற்றுக்கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக, மனித மலைகளாகஉறுதியோடுநின்ற மாவீரர்களை நான் என்றும் மறக்கமுடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.

எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடுகொடுத்து தனது விடுதலைப் பயணத்தில் வெற்றி நடைபோடமுடிந்தது என்றால் அதற்கான அடிப்படைக் காரணம் எமது இலட்சிய உறுதிதான் என்பதை நான் திட்டவட்டமாகக் கூறுவேன். நீண்ட வரலாற்று அனுபவத்தில் நான் கண்டு உணர்ந்த உண்மை இது.

ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளிகளைச் சந்திக்கின்றது. பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. கொந்தளிப்பான பல சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்கின்றது. விடுதலைப்போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் ஒரு மரணகளம். சாவையும் அழிவையும், துன்பத்தையும் பரிசாகக் கொடுத்துத்தான் நாம் சுதந்திரம் எனும் சுவர்க்கத்தைக் காணமுடியும். கரடுமுரடான பாதைகள் நிறைந்த இந்த இலட்சியப் பயணத்தில் எமக்கு ஒரேயொரு ஊன்றுகோலாகஇருப்பதுஎமது உறுதிதான்;

(5ஆம் பக்கம் பார்க்க)

டத்தில் தியாகமரணமடைந்த மாவீரர்களின் நினைவுச் சுடர்கள் அனைத்து மாவீரர் துயிலும்இல்லங்களிலும் ஏற்றி வைக்கப்பட்டது.

யாழ். வலிகாமம் பிரிவில் உள்ள கோப்பாய் மாவீரர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மோ. மகேந்திரராசா இன்று அதிகாலை 12.03 மணிக்கு ஏற்றி வைத்தார். இதேவேளை வடமராட்சி, தென்மராட்சி, தீவகற்பம் ஆகிய பகுதிகளுக்கான பிரதேசப் பொறுப்பாளர்களினால் அந்தந்த மாவீரர் துயிலும் இல்லங்களில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் எண்ணிக்கை அளவிலான நினைவுச்சுடர்கள் ஏற்றிவைக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளாங்குள. குண்டுவீச்சு; சகோதரிகள் உட்பட ஐவர்பலி

## ஆஸ்பத்திரி, பாடசாலை சேதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள வெள்ளாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் காலை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நடத்திய தாக்குதலில் ஐந்து பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டு குண்டு வீச்சு விமானங்களும், அவ்ரோ விமானமொன்றும் இக்குண்டு வீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டன. இப்பகுதியிலுள்ள அரசினர் வைத்தியசாலை ஒன்று, பாலர் பாடசாலை ஒன்று இரண்டு வீடுகளும் இவ்விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் முற்றாக சேதமடைந்தன. இத்தாக்குதலில் பிரான்சிஸ் ஜெசிந்தாதேவி (26 வயது வெள்ளாங்குளம்) பிரான்சிஸ் அஞ்சலாதேவி (24 வயது வெள்ளாங்குளம்) ஆகிய இரு சகோதரிகளும் ஜெகதீஸ்பரன் சொரூபன் (6 வயது) விவேகானந்தன் அரிதரன் (10 வயது) கணபதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஊரியான் இறங்குதுறையில் விமானக் குண்டு வீச்சு

### ஒருவர் படுகாயம், படகுகள்சேதம்

(ஊரியான்)

சிறிலங்கா விமானப்படையினர் ஊரியான் இறங்குதுறை பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதல் நடாத்தியதில் படகோட்டி ஒருவர் காயம் அடைந்ததுடன் பொது மக்களின் சில படகுகளும் சேதமடைந்திருக்கின்றது.

(6ஆம் பக்கம் பார்க்க)

**இலவசஇணைப்பு**

**1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.**

## நம்பிக்கைக்குரியவர்களாக விடுதலைப் புலிகள்

[நமது நிருபர்]

தமிழீழ மீட்பு நிதிக்காக மக்களிடம் கடனாக வாங்கிய பவுணை வாக்குறுதி அளித்தபடி மீள வழங்கியதன் மூலம் தமிழீழ மக்களின் நம்பிக்கைக்குரியவர்களாக விடுதலைப் புலிகள் திகழ்கின்றனர். இவ்வாறு கடன்பத்திரத்திற்கான பவுணை மீளப் பெற்றுக் கொண்ட ஞானசம்பந்தன் என்ற பொதுமகன் நமது நிருபருக்குத் தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட கிராமிய அபிவிருத்தி இலாகாப் பதவி வெற்றிடம் தையல் பயிற்றுவிப்பாளர் (தற்காலிகம்) பெண்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ் மாவட்டத்தில் வசிக்கும் இலங்கைப்பெண் பிரசைகளி-லிருந்து கோரப்படுகின்றன. வெற்றிடமுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 18 12 91 ஆகும். விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரிகளே சுயமாக தயாரிக்க வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் அரசாங்க அதிபர், (கிராமிய அபிவிருத்திக்கிளை) செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமோ அன்றேல் நேரடியாகவோ அனுப்பப் பட வேண்டும். முடிவுத் திகதிக்குப்பின் அல்லது வேறு எவரின் பெயருக்கு விலாசமிட்டோ அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(அ) கல்வித்தகைமை:- க. பொ. த. (சா.த) இல் சுகாதாரம், மனையியல், தையல், ஆகிய மூன்றுபாடங்களில் 2 பாடத்திற்கு திறமைச் சித்தியும், தமிழ் பாஷை, எண் கணிதம்/ கணிதம்/ வர்த்தககணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது சி. த. ப. (சா.த) இல் 5 பாடங்கள் (2 அமர்வுக்குக் கூடாமல்) சித்தியடைந்திருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தையல், மனையியல், பாடங்களில் டிப்ளோமா பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

குறிப்பு:- மேற்படி தகைமையுடன் கிராமிய அபிவிருத்தி இலாகாவினால் நடாத்தப்படும் மாவிர் அபிவிருத்தி நிலையத்தில் பயிற்சி பெற்று சான்றிதழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை:- 1991-12-18 இல் 18 க்கும் 40 க்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

சம்பளம்:- நாளொன்றுக்கு 53/70ம் சகல அரச படிகளும்.

வெற்றிடமுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்

(1) சாவகச்சேரி (3) வேலணை
(2) தெல்லிப்பழை (4) மருதங்கேணி

இப்பதவிகள் தற்காலிகமானது. எக்காரணம் கொண்டும் நிரந்தரமாக்கப்படமாட்டாது.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளரும்,
யாழ். மாவட்டம்.

(B/3533)

## கள்ளவோட்டால் ஆட்சிக்கு வந்தவர்கள்

### சு. க- எம்பி சிறிபெல்ல

நீங்கள் கள்ள வோட்டால் ஆட்சிக்கு வந்தவர்கள் அதனால்தான் உங்களைச் சார்ந்த தலைவர்கள் அங்கீகரிக்க வில்லை என்று வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு எதிர்க்கட்சித் தரப்பில் பேசிய லஷ்மன் சிறிபெல்ல (சு. க.) கூறினார்.

லஷ்மன் சிறிபெல்ல இவ்வாறு பேசியபோது அமைச்சர் காமினி லொக்குகே குறிப்பிட்டார்.

சார்க் மாநாடு நடைபெறாது என்று காலை 9 மணிக்குத் தெரிவித்தது அதனையா ஜனாதிபதியிடம் தெரிவிப்பது என்னை விட்டு அமைச்சர்கள் நள்ளிரவு 12 மணி வரை யோசித்தனர் என்று லஷ்மன் சிறிபெல்ல கூறியபோது வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி அதில் உண்மை இல்லை என்றார்.

## 5 மாதத்தில் 2131 இலங்கையர் இங்கிலாந்தினுள் நுழைவு

(லண்டன்)

இவ்வருடம் முதல் ஐந்து மாதங்களில் இங்கிலாந்து சென்று தஞ்சமடைந்த அகதிகளின் மொத்தத்தொகை 20778 ஆகும். இத்தொகையில் 2131 பேர் இலங்கையர் என்று அகதிகள் சுவல்ல விடுத்த புள்ளிவிபரம் தெரிவிப்பதாக இங்கிலாந்து தமிழர் தகவல் நிலையம் நடத்தும் பத்திரிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அப்பத்திரிகையில் 1981 ஆம் ஆண்டிலிருந்து 1990 ஆம் ஆண்டுவரை 10861 இலங்கை அகதிகள் இங்கிலாந்து வந்துள்ளனர் என்றும் இதில் 726 பேருக்கு மட்டுமே அகதிகள் அந்தஸ்து வழங்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். மாவட்ட இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்கப் பொதுக் கூட்டம்

சின்னக்கடை வடக்கு வீதி 9ஆம் இலக்க சங்கக் காரியாலயத்தில் 29-11-91 வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு நடைபெறும்.

பிரதேச சபை, மாநகர சபை, நகரசபைபட்டின சபை, கிராமசபைகளில் அனுமதிபெற்றுள்ள சகல ஆட்டு-மாட்டிறைச்சிக் கடை வியாபாரிகள் அனைவரையும் கூட்டத்தில் கட்டாயமாக கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

மாநகர சபை, பிரதேச சபை, உள்ளூராட்சிப் பிரமுகர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து சிறப்பிப்பர்.

காசி. கிருஷ்ணன்
செயலாளர்

மண் மீட்புப் போரில் உயிர் நீத்த மாவீரர்களைக் கௌரவிப்போம்.

யாழ்-மாவட்ட
இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்கம்.

(B/3540)

## வரி விளம்பரம்

### ஜீவிதா தொழில் நுட்பக் கூடம்

ரி. வி. டெக். தேடி யோ. மணிக்கூடு. றிவைண்டிங் மற்றும் மின்சார உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் வீடியோவுடன் படப்பிடிப்பாளர்களும், புதிய பழைய பாடல்களும் [புரட்சிப் பாடல்கள்] பதிவு செய்து கொடுக்கப்படும். ஒட்டுமடம் சந்தி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

[B/1940]

### விவாகப் பொருத்துனர் சேவை நிலையம்

மேலை நாடுகளில் உயர்பதவி பெற்ற பொறியியலாளர். ஆசிரிய வைத்தியர்கள், வெளிநாடுகளில் சாதாரண தொழில் புரிவோர் ஆகியோரது ஜாதகங்கள் நூற்றுக் கணக்காக எம்மிடம் உண்டு. தொடர்பு:- சு. ஆ. ராமலிங்கம் 24, புறாடிலேன், கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(R/1939)

## யானைகளில் எட்டிற்கு மதமாம்

(கல்முனை)

"என்னிடம் 125 யானைகள் உள்ளன. இவை அனைத்தையும் நல்ல யானைகள் என்றே நான் நம்பினேன். ஆனால் இவற்றில் எட்டு யானைகள் மதம் பிடித்து என்னையே தாக்க வந்தன" என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கல்முனையில் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்,

முன்னதாக திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசாவிடம் அம்பாறை மாவட்டத்திலுள்ள வயல் காணிகளில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக மகஜர் ஒன்றை கையளித்திருந்தார். இது பற்றிக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## நினைவு கூருகின்றோம்...

## 1991 - 11 - 27

1982 ஆம் ஆண்டு நல்லூரில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முற்றுகையில் காயமுற்று தமிழகத்தில் சிகிச்சை பெற்று வரும்போது இதேதினத்தில் வீரச்சாவு எய்திய

லெப். சங்கர் / சுரேஷ் [செல்வச்சந்திரன் சத்தியநாதன் - கம்பர்மலை, வல்வெட்டித்துறை]

1987 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

துமிலன் [ராஜகோபால் ரவிச்சந்திரன் - முள்ளிப்பொத்தானை]

தண்ணீரூற்றில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

லெப். அலன் [முருகேச உருத்திரமூர்த்தி -

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

மாவீரர் நாளில் மானமறவேங்கைகளின் திருநாளில் ஒட்டுசுட்டானில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா விமானப்படையின் குண்டு வீச்சில் நான்தோன்றி ஈஸ்வரர் சந்நிதானத்தில் சாவு கொள்ளப்பட்ட இவர்களை முதலாவது ஆண்டில் நினைவு கொள்வோம்.





**திரு அருணாசலம்**

பிறப்பு 1936-04-25 — அழிப்பு 1990-11-27

**செல்வி கவிதா**

பிறப்பு 1981-03-31 — அழிப்பு 1990-11-27

(மாவீரன் கப்டன் அருச்சுனாவின் தந்தை சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது)

இவர்களுடன் கொல்லப்பட்ட ஏழு தமிழீழ நெஞ்சங்களையும் இந்நாளில் நினைவு கொள்வோம்; குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்வோம் ஒன்றாக இணைந்து தலை நிமிர்ந்து தொடரவண்டில் நிற்போம்.

வேதனைகள் எமக்குப் பெரிதல்ல - ஆனால்
வெல்வோம் பகை கொல்வோம் என்பதே தேவை

மாங்குளம். (B/3538) சிற்றூர் அவை

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

கனிஷ்ட தொழில்நுட்ப பாடநெறி ஆசிரியர்களுக்கான விசேட கல்விக்கருத்தரங்கு ஒன்று நாளை சகல கல்விக் கோட்டங்களாலும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

யாழ். வேலணை கோட்டங்களுக்கு நல்லூர் சாதனா பாடசாலையிலும், பண்டத்தரிப்பு, மருதனாமடம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய கோட்டங்களுக்கு முறையே மகளிர் கல்லூரியிலும், இராமநாதன் கல்லூரியிலும் வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் டிறிபேக் கல்லூரியிலும், இக்கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

மேலும் நேர்முகப் பரீட்சையின் போது 70 வீதமான புள்ளிகள் தொடர்மதிப்பீட்டிற்கும், 30 வீதமான புள்ளிகள் எழுத்துப் பரீட்சைக்கும் வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(சலோ)

## பண்ணிசையில் மயூரன் முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கடந்த 15 ஆம் திகதி நடந்த பண்ணிசைப் போட்டியில் ஆரம்பப்பிரிவில் யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவன் சிவநேசன் மயூரன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இப்போட்டியினை யாழ். கல்வித் திணைக்களம் நடாத்தியது.

லெப். அலன் [முருகேசு உருத்திரமூர்த்தி -
செம்மலை, மணலாறு]

இதே ஆண்டு இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் இந்தியப் படையினரின் கண்ணி வெடியில் சிக்கியதில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்

யாழ். [illegible] புகுந்த இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்டு முகாமில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

1989 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் இந்தியப் படையினர் கைது செய்ய முயன்ற போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

**2ஆம் லெப். தினேஷ்** [தில்லை அம்பலம் தினேஷ் - சாந்திநேஷ், புதுக்குடியிருப்பு]

பொலிகண்டியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

**லெப். றிச்சார்ட்** [இராமசாமி குணராசா - குப்புறுப்பிட்டி, திருக்கோணமலை]

புலோப்பளையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

**சுதா** [க. சுதாகரன்]

1990 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டானில் சிறிலங்கா விமானப்படை விமானங்களின் குண்டு வீச்சால் கொல்லப்பட்ட 2 சிறுமிகள், சிறுவன் உட்பட 9 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ லெப். அலனின் பெயர் தவறுதலாக கடந்த 23ஆம் திகதி விளம்பரத்திலும் வெளிவந்துள்ளது.

(B/8524)

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

# ஒரு தோழனின் நினைவலைகளில் இவன்

— அப்பையா அண்ணை

இன்று எமது இயக்கம் எவ்வளவு பெரிய அமைப்பாக வளர்ந்து... எவ்வளவு பெரிய சாதனைகளைப் புரிந்து... எண்ணிப் பார்க்கிறேன்... அன்று இந்த இயக்கம் இப்படியெல்லாம்... வளர வேண்டுமென்று கனவு கண்டவர்கள் இந்த இயக்கத்தைச் சுமக்கின்ற தூண்களாக நின்றவர்கள்... இன்று எங்கள் நினைவுகளில் ஜீவிப்பவர்களாகி எத்தனை காலம்...

இவர்களில் ஒருவன் தான் லெப்டினன்ட் சங்கர் எந்தக் கடுமையான காரியத்தையும் சிரித்த முகத்தோடு ஏற்றுக் கொண்டு செயலாற்றுவான். இவனுடைய தாக்குதல்அணிப் பிரிவில் பங்கு பற்றுகின்ற வீரர்கள் எந்தக் கிலேசமும் இன்றி தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் கருமமாற்றுவர்.

எமது விடுதலை இயக்கத்தின் அத்திவாரத்தை ஆட்டங்காணச் செய்யும் முயற்சியில் ஈடுபடுகின்ற இனத்துரோகிகளையும் உளவுப் படைகளையும் ஆட்டங்காணச் செய்வதே எமது போராட்டமாகிப் போன எத்தனை பெரிய சாதனைகளை இவன் செய்தான்.

தலைவர் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டு விட்டார் என்று செய்தி கேள்விப்பட்டதும் நாமெல்லாம் மிகவும் ஆத்திரமும் வேதனையும் துடிப்பும் அடைந்தோம்; சங்கரும் அப்படியே தலைவர் மீது ஆழ்ந்த அன்பும் பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்தான்.

தலைவரை விடுவிக்க என்ன செய்யலாம்...? எல்லோருடைய கேள்வியும் இதுவே. இறுதியில் நாமெல்லாம் ஒன்று சேர்ந்து ஆலோசித்து தலைவரை விடுவிப்பதற்காக பல முயற்சிகளில் இறங்கினோம். இந்த வகையில் சங்கரின் பங்கு மிகப் பெரியது. ஈற்றில் நாம் வெற்றி கண்டோம்.

நெல்லியடி பொலிஸ் ஜீப் தாக்குதல் இவனின் வீரத்திற்கு எடுத்துக்காட்டு. சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் இவனின் சாதனை பெரியது. தாக்குதலின் முடிவில் கூட காயம் பட்டவர்களையும் ஆயுதங்களையும் கொண்டு வந்து சேர்ப்பதில் இவனின் வேகம்... விரைவு.. பலம்...

எதிரியின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு விடுதலைக்காய் வியர்வை சிந்திக்



லெப். சங்கர்

கொண்டிருந்த சங்கர் ஒரு நாள்... இரத்தத்தை சிந்திக் கொண்டிருந்தான்... ஆம் அவன் யாழ். குடாநாட்டில் ஒரு வீட்டில் வைத்து எதிரியால் சுற்றி வளைக்கப்பட்டு சுடப்பட்டு விட்டான். வயிற்றில் குண்டை வாங்கிக் கொண்டும் சிங்களச் சிப்பாய்களை ஏமாற்றி விட்டு ஓடிக் கொண்டிருக்கிறான். கையில் ஒரு கைத்துப்பாக்கி (பரபெலம் 45) அவனுடைய இலட்சியப்பற்றும் உறுதியும் அர்ப்பண உணர்வும் அவனின் இறுதி முயற்சிக்கு கைகொடுத்தன. வயிற்றில் இருந்து குருதி வழிந்தவாறே இருக்க... அவன் அனுபவித்துக் கொண்டிருந்த ரணவேதனையையும் மீறி கால் தசைகள் பலமாகவும் வேகமாகவும் இயங்கி அவனை தோழர்களிடம் கொண்டு வந்து சேர்த்தது.

எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் அவனைப் படகு மூலம் தமிழ் நாடு கொண்டு போய்ச்சேர்ந்தோம். தன் உடலில் உள்ள குருதி முழுவதையும் சிந்திய நிலையில் சங்கர் வலுவிழந்துவிட்டான். முதன் முதலாக எங்கள் குடும்பத்தில் ஒருவன் மண்ணுக்காக குருதியை சிந்திவிட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறான்... அப்பொழுது நாம் 20-25 பேர்கள் தான் இருப்போம். சங்கர் மீதுள்ள அன்பாலும் பாசத்தாலும் ஒரு தந்தையைப் போன்று தலைவர் மிகவும் சோகமே உருவாகக் காணப்பட்டார்.

தன் உடலில் உள்ள குருதியை சங்கரின் உடலுக்கு கொடுத்தார்... அவன் உயிரோடு பிழைத்துத் தன்னோடு விடுதலைப் பணியினைத் தொடருவான் என்று... நம்பிக்கைகளை மெது மெதுவாகக் கரைத்துக் கொண்டு... சங்கர் தலைவரின்மடியிலேயே நிரந்தரமாக படுத்துக் கொண்டான் ஆம்... அவன் நம் எல்லோரையும் விட்டுப்பிரிந்து விட்டான்... நம்உடன்பிறப்பு நம்மெல்லோரையும் விட்டுப் பிரிந்து விட்டது...

இத்தகைய துயரம்நிறைந்த நாளே இன்று நம்தோழர்கள் அனைவரினதும் நினைவு நாளாக நம் நெஞ்சங்களை நெருடுகின்ற நாளாக... எங்கள் உயிரானவர்களை உணர்கின்ற நாளாக... மாவீரர் நாள் என்று பிறப்பெடுத்திருக்கிறது.

நன்றி - விடுதலை இரத்தத்தில் முதற்துளி - லெப்டினன்ட் சங்கர்.


## தமிழீழ காவல் துறை காவலர் பதவிக்கான விண்ணப்பம்

கீழ்க்காணும் தகைமையுடையவர்கள் தமிழீழ காவல் துறையின் காவலர் பதவிக்கான விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் 29-11-91 வெள்ளிக்கிழமை தமிழீழ காவல் துறையின் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமைக் காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

வயது:- 18 ............ 30
கல்வித்தகைமை:- க.பொ.த (சாதாரணம்)
உயரம்:- 5' ......... 6'

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
த. ஈ. கா. துறை.

(B/3537)



## வெளிநாட்டுத் தபால்களை இன்றே ஒப்படைப்பீர்! துரித தபால் சேவைக்கு

DHL WORLDWIDE EXPRESS

DHL
C/o Cosmos Marketing Services
120 (200), K.K.S. Road,
JAFFNA

(B/3456)


## நினைவஞ்சலி





2 ம் லெப். தினேஸ் (தில்லை- அன்ரன் தினேஸ்)
பிறப்பு:- 13.06 1969
இறப்பு:- 27.11.1989

லெப். கணேஸ் (தில்லை- டொமினிக் சாந்தன்)
பிறப்பு:- 05.08.1963
இறப்பு:- 21,11.1986

புதுக்குடியிருப்பு மண்ணில்
பூத்திட்ட புதுமலர்காள்
சில்லாலைப் புழுதியிலே
செழிப்புற்ற சிறுத்தைகளே!
கிளிநொச்சிக் கல்வியிலே
கிளை விட்டு வளர்ந்தீரே
ஒட்டுசுட்டான் களத்தில்
உயிர் விட்ட கணேஸ் வேங்கை
பலாலி மண்ணில் வித்தான
பலமறியா தினேஸ் மறவன்
தாய்பொருந்தி வயிற்றினிலே
தவிர் விட்ட இருபுலிகாள்
தமிழ் மண்ணை மீட்டிடவே
தந்தீரோ நும் உயிர்கள்
மண்ணுக்கு உரமான
மாவீரர் நீர் வாழ்க

'சாந்தினேஸ்' பவனம், சில்லாலை, புதுக்குடியிருப்பு.

உங்கள் பணியைத் தொடரும் தாய், தந்தை, மைத்துனர்கள், சகோதரிகள், மருமகன் கிரேஸி

(B/3487)


## மாவீரர் நாள் நவம்பர் 27


எம்மினத்தின் விடுதலைக்காக
இன்னுயிர் சிந்திய
இளவேங்கைகள்
எம்மோடு என்றும்
வாழ்கின்றார்கள்
அவர்கள் நினைவாக
எமது அஞ்சலிகள்

நிர்வாகத்தினரும் ஆசிரியர்களும்
மாணவர்களும்

விக்னா
கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.

(B/3534)

# மாவீரர் தினம் நவம்பர் - 27



தன்னலம் தனைத் துறந்தார்கள்
தாயகமே தம்தாகமென்றார்கள்
தமிழுக்கே உயிரென மொழிந்தார்கள்
தமிழீழம் மீட்க தியாகம் செய்தார்கள்
ஓ! வீரர்களே!
உங்கள் தியாகங்கள் —
என்றும் — உச்சரிக்கப்படும்!

# எழிலகம்

மணிக்கூட்டுவீதி, - யாழ்ப்பாணம்.

(B-3530)

### சிந்தனைக்கு

எதைச் செய்தாலும் எச்சரிக்கையாக, முடிவை எண்ணிப் பார்த்துச் செய்.
— லத்தீன் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 27-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# பயன் இல்லை; பட்டங்கள் உண்டு

'சிங்கள மாணவர்கள் கவலையோடு உத்தியோக வாய்ப்புக்களையும் சேர்த்துப் பார்க்கின்றார்கள். இது அங்குள்ள பிரச்சினை. இங்கு (தமிழர்கள்) பல்கலைக்கழகங்களில் நுழையும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டுப் பல்கலைக்கழக அனுமதி பெற முடியாத மாணவர்கள் சேர முயற்சிப்பார்கள். இது அவர்களுக்கொரு வாய்ப்பாகும் என வட மாகாண ஒன்றிணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி பதில் பணிப்பாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் நேற்று நடந்த செய்தியாளர் கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

சிங்கள அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தல் முறையானது தமிழ் மக்களின் பல்கலைக்கழக அனுமதியைத் தடுத்தன. இதனால் பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக்களை இழந்தனர். இந்த தரப்படுத்துதல் விவகாரம் தமிழ்த் தேசிய இனப் போராட்டத்திற்குத் தூண்டுதலாகவும் அமைந்தது. தரப்படுத்தலை நீக்குதல் என்பதும், பல்கலைக்கழகத்திற்கு அனுமதியை அதிகரித்தல் என்பதும் இன்றும் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினையாகவே உள்ளது.

ஆனால் தற்போது ஆரம்பிக்கப்படும் பல்கலைக்கழக கல்லூரிகள் இப்பிரச்சினையை எந்தளவில் தீர்க்கும்என்பது கேள்விக்குரியதே.

'பல்கலைக்கழகங்களில் தற்பொழுது பின்பற்றப்பட்டுவரும் கல்வித்திட்டம் தற்காலத்திற்குப் பொருத்தமற்றது. இந்தக் கல்வித்திட்டத்தினால் உருவாகும் கலை, விஞ்ஞான பொறியியலாளருக்கு தொழில்கள் இடைப்பதில்லை' என பல்கலைக்கழக மானியக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ச்சுனா அலுவிகார தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வேலையில்லாத்திண்டாட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள மக்களை ஏமாற்றும் திட்டமே இந்த பல்கலைக்கழக இணைந்த கல்லூரிகள் என பல்கலைக்கழக ஒன்றியங்களின் தலைவர் பேராசிரியர் நவிதா சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த இரு பேராசிரியர்களின் கருத்தின் அடிப்படையில் தற்போதுள்ள பல்கலைக்கழக கல்வித்திட்டம் தொழில் வாய்ப்பிற்கு உகந்ததல்ல. தொடர்ச்சியாக வேலையில்லாத் திண்டாட்டத்தையே அதிகரித்துச்செல்லும். மக்கள் நன்மைஅடையப் போவதில்லை என்பதையே தெளிவாக்கின்றது. சர்வதேச ரீதியாகவும் தொழில்சார் கல்வியேஇன்றுமுதன்மை பெற்று வருகின்றது.

இதேவேளை இந்த இருவரும் சிங்களப் பேராசிரியர்கள். பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்கள்: அவர்களே இந்த திட்டத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் தான் பெருகும் பயனேதும் ஏற்படப் போவதில்லை. பட்டதாரிகளின் எண்ணிக்கை தான் பெருகும் எனத் தெரிவிக்கும் போது, அடக்கி ஒடுக்கப்படும் ஒரு இனத்தைச் சேர்ந்த ஒரு இனத்திற்கு இந்த இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகளால் நன்மை பெருகும் எனத் தெரிவிப்பது எந்தளவிற்கு சரியானது? ஏற்புடையது?

அத்தோடு தமிழர் தரப்பிலும் தற்போது கல்வித் திட்டம் தொடர்பாகவும், பல்கலைக்கழகக் கல்வி தொடர்பாகவும் பலமான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்ற பலர் தமது மண்ணையும், மக்களையும் சிந்தியாது தமது சுயநலனுக்காக வெளிநாடு சென்று அங்கே தமது சேவையை வழங்குகிறார்கள் இந்த நிலைக்குக் காரணம் எமது பிள்ளைகள் மத்தியில் தேசப்பற்று, இனப்பற்று, மொழிப் பற்று வளரக் கூடிய கல்வியை நாம் ஊட்டாததேயாகும். எனவே எமது தேசியப் பற்றை வளர்க்கக் கூடிய கல்வியை ஏற்படுத்த வேண்டும் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் துரைராசா இந்த வருட முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இணைந்த பல்கலைக்கழக கல்லூரியினால் தமிழ் மாணவர் பெரும் நன்மை அடைவர். வாய்ப்புக்கள் பெருகும் என ஒரு அரச அதிகாரி தெரிவிப்பது சிறிலங்கா அரசின் கொள்கைக்கும் தமது பதவிக்கும் முட்டுக் கொடுக்கும் நடவடிக்கையே ஒழிய வேறொன்றும் இல்லை.

## எந்த சவாலையும் ஏற்க தயார்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# நெருக்கடியான வரலாற்றுத் திருப்பம்

இன்று ஒரு புதிய நெருக்கடியான வரலாற்றுத் திருப்பத்தை நாம் சந்தித்து நிற்கின்றோம்.

எதிரிப் படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிட்டு நிற்கின்றன. பொருளாதாரத் தடைகளை இறுக்கி உணவுப் பஞ்சத்தை உண்டுபண்ண எதிரி முனைகின்றான். இராணுவ அழுத்தம், பொருளாதார நெருக்குதல் என்ற ரீதியில் இரு முனைகளில் எமது மக்கள்மீது யுத்தம் ஒன்று ஏவப்பட்டிருக்கின்றது. எமது போராட்டத்தின் அசைக்கமுடியாத அரணாக நிற்கும் எமது மக்களின் மன பலத்தை உடைத்துவிட எதிரியானவன் எல்லாவித தந்திரோபாயங்களையும் கடைப்பிடிக்கலாம் என்பது எமக்குத் தெரியாததல்ல.

எமது மக்கள் சிங்கள இனவாத அடக்குமுறையின் அக்கினிப் பரீட்சையில் புடம் போடப் பட்டவர்கள். அரச பயங்கரவாதத்தின் அகோரங்களை சந்தித்தவர்கள். துன்பச் சிலுவையைச் சதா சுமந்து பழகியவர்கள். மரணத்தின் நிழலில் படுத்துறங்கி வாழ்பவர்கள்.

# இறுதி ஆயுதமாக உணவுப் போர்

[illegible] தோல்வியின் இறுதி ஆயுதமாக உணவுப் போர் எமது மக்கள் மீது தொடுக்கப்படலாம். பட்டினிச் சாவால் மக்களின் மன உறுதியைச் சிதைத்திட எதிரி முயற்சிக்கலாம். ஆனால் சுதந்திரப் பசியில் உறுதி பூண்ட மக்களை சோற்றுப் பசி தீண்டி நலிவடையப் போவதில்லை.

எனது அன்பார்ந்த மக்களே இன்று நாம் எதிர்கொள்ளும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எதிரியின் எந்த சவாலுக்கும் நாம் முகம் கொடுக்க தயாராக இருக்க வேண்டும்.

எமது மன உறுதிக்கு எதிரி சவால் விடுகின்றான். இந்த சவாலை ஏற்பதற்கு எமக்கு ஆத்ம உறுதியைத் தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை.

சிங்கள அரசானது ஒரு புறம் போர்க் கொடியை உயர்த்திக் கொண்டு மறுபுறம் சமாதானச் சமிக்ஞைகளை காட்டுகிறது.

# சமாதானமா? போரா? நாம் தயார்

நாம் சமாதானத்திற்கும் தயார், போருக்கும் தயார். சமாதானத்தின் வழியைத் திறப்பதா அல்லது யுத்தத்தின் பாதையில் செல்வதா என்பதனை எதிரி தான் தீர்மானிக்க வேண்டும்.

நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்து விட்டிருக்கின்றோம். சமாதான வழிமுறையில் சமரசப் பேச்சுக்களை நடத்த நாம் தயார்.

எந்தவித அழுத்தங்களுமின்றி, எந்தவித ஆதிக்கமுமின்றி, சமத்துவத்தின் அடிப்படையில் நீதியின் அடிப்படையில், நிபந்தனையின்றிப் பேச்சுக்களில் பங்கு கொள்ள நாம் என்றும் தயார்.

எமது கொள்கையை, எமது நிலைப்பாட்டை, எமது தேசிய போராட்டத்திற்கு ஆதாரமான அடிப்படைகளை சிங்கள அரசிற்கும் உலகிற்கும் எடுத்து விளக்க பேச்சு வார்த்தைகள் வாய்ப்பளிக்கும்.

# கௌரவமாக வாழ விரும்புகிறோம்

நாம் இனத்துவேசிகள் அல்லர். போர் வெறி கொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாகவோ கருதவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கின்றோம். சிங்களப் பண்பாட்டை கௌரவிக்கின்றோம். சிங்கள மக்களின் தேசிய வாழ்வில், அவர்களது சுதந்திரத்தில் நாம் எவ்விதமும் தலையிட விரும்பவில்லை.

நாம் எமது வரலாற்றுத் தாயகத்தில் ஒரு தேசிய மக்கள் இனம் என்ற அந்தஸ்துடன் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவத்துடன் வாழ விரும்புகின்றோம். 'எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள்,' என்பது தான் எமது மக்களின் எளிமையான அரசியல் அபிலாசை, இந்த நியாயமான நீதியான, நாகரீகமான எமது மக்களின் வேண்டுகோளைச் சிங்கள அரசு எப்பொழுது அங்கீகரிக்கின்றதோ அப்பொழுதுதான் ஒரு நிரந்தர சமாதானமுறை தீர்வு ஏற்பட வாய்ப்பு உண்டு.

# அழுத்தங்களுக்கு விட்டுக்கொடோம்

இராணுவ ஆக்கிரமிப்பு முறை என்ற அணுகுமுறை மூலம் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை சிங்கள அரசு இன்னும் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இராணுவ மேலாதிக்கத்தை எப்படிப் பிடிக்க வேண்டும். தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க வேண்டும், என்ற ஆதிக்க வெறி இன்னும் சிங்கள ஆளும் வர்க்கத்திலிருந்து அகன்று போனதாகத் தெரியவில்லை.

இராணுவ ஆதிக்கத்திற்கும் அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக்கொடுத்ததேயில்லை. கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை. எமது இயக்கத்தின் இந்த உறுதிப்பாட்டை உலகத்தின் மிகப் பெரிய இராணுவமே பரிசீலித்துப் பார்த்துத் தோல்வி கண்டது. சிங்கள இராணுவமும் இந்த வரலாற்றுத் தவறை சந்திக்கத்தான் நேரிடும்.

எனது அன்பார்ந்த தமிழீழ மக்களே,

நீண்ட விடுதலைப் பயணத்தில் சோர்வுகள் எம்மை ஆட்கொள்ளலாம், போராட்ட வாழ்வின் பெரும் சுமைகள் எம்மை அழுத்திப் பிடிக்கலாம். மேலும் பளுக்கள் எம்மீது சுமத்தப்படலாம்.

ஆனால் நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.

விர சுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதி தான் வலுமிக்க ஆயுதம்.

இன்று எமது மாவீரர்களின் கல்லறைகளிலிருந்து ஒலிக்கும் சுதந்திர கீதமும் உறுதியின் உன்னதத்தைத்தான் பாடுகின்றது.

# குடும்பத்திற்கு அரை லீற். மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மக்களுக்கு மிக நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் செயலக புனர்வாழ்வுப்பகுதி மண்ணெண்ணெய் வழங்குகின்றது.

இதற்குத் தேவையான சுமார் 500பீப்பா மண்ணெண்ணெயை யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பு சென்று அகில உலக ஹெயர் [illegible] நத்திடம் கடனாகப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

ஆமேசன் என்ற கப்பலில் இங்கு எடுத்து வரப்பட்ட மண்ணெண்ணெய் குடும்பம் ஒன்றிற்கு அரை லீற்றர் வீதம் மிக விரைவில் விநியோகிக்கப்பட இருக்கின்றது.

மாவட்டத்திலுள்ள அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தமக்குத் தேவையான மண்ணெண்ணெய் விபரத்தை சமர்ப்பித்து மண்ணெண்ணெயைப் பெற்று விநியோகத்தை தொடங்கும்படி பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது.

(க)

# மாவீரர் நினைவாக நினைவுஸ்தூபி

பாண்டியன் தாழ்வு மாவீரர்களின் நினைவாக இவ்வூர் மக்களால் அமைக்கப்பட்ட நினைவுஸ்தூபி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. பெருந்தொகையான மக்கள் மாவீரர்களின் ஸ்தூபிக்கு மலர் தூவி நினைவு கூர்ந்ததோடு இவ்வூரில் உள்ள வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளது. 34

# சிறுவர்கள் தாய்மாருக்கு பாலுணவு வழங்கல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த கர்ப்பிணித் தாய்மாருக்கும், சிறுவர்களுக்குமான பாலுணவு வழங்கும் திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களும், யாழ் செயலகமும் இணைந்து மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. (க)

# ஜெயலலிதாவின் சர்வாதிகாரம்: தி. மு. க. பலத்த கண்டனம்

(டில்லி)

தமிழ் நாட்டில் அரசியல் எதிர்ப்பாளர்களுக்கும், மூதுநிலை அதிகாரிகளுக்கும் எதிராகப் பயங்கரவாதிகள் மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தை ஜெயலலிதா அரசு தவறாகப் பயன்படுத்துவதாக திராவிட முன்னேற்றக் கழகம் குற்றம் சாட்டியுள்ளது.

சென்னையில் நேற்றுக் காலை தி.மு.க நிர்வாகக் குழு நிறைவேற்றிய தீர்மானத்தில் இந்தச் சட்டத்தின் கீழ் அரசியல் எதிராளிகளும், மூதுநிலை அதிகாரிகளும் சிறையில் துன்புறுத்தப்படுவதாகவும், ஜெயலலிதா அரசு சர்வாதிகாரப் பாதையில் செல்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

## யாழ். மாவட்டத்தில்

# பாராளுமன்ற உறுப்பினர் தொகையில் குறைப்பு

(கொழும்பு)

ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களிலும் இருந்து அடுத்து தெரிவு செய்யப்படவேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா விசேட வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

23 - 10 - 91ஆம் திகதியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவித்தலின்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் தற்போதைய மொத்தத் தொகை 196 இதில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

ஆனால் நுவரெலியா, வன்னி, திகாமடுல்ல ஆகிய மாவட்டங்களின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை தலா ஒன்றால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்றாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றமில்லை.

வாக்காளர் தொகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு குறைவிற்கு ஏற்பவே ஆறு தேர்தல் மாவட்டங்களில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

---

ஊரியான்

நேற்று அதிகாலைப் பொழுதில் இப்பகுதிக்கு விரைந்து வந்த சிறிலங்கா விமானப் படையினரின் "அவ்ரோ" விமானம் ஒன்று கண்மூடித்தனமாக பீப்பாக்குண்டுகளை உருட்டிவிட்டது. இந்த இறங்குதுறைப்பகுதியிலிருந்த பொதுமக்களில் படகோட்டி ஒருவர் பலத்த காயம் அடைந்தார். ஏனையவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட்டனர். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொதுமக்களின் இரண்டு படகுகள் முற்றாகச் சிதறிச் சேதமடைந்தன. மேலும் சில படகுகள் தீப்பற்றி எரிந்தன.

(கலோ)

---

வெள்ளாங்குள

பிரபாகரன் (8 வயது, பாலியாறு) ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் விஜயகுமார் விஜயலட்சுமி (26 வயது வெள்ளாங்குளம்) தவயோகராசா சுரேஸ் (10வயது) செல்வநாயகம் பாலச்சந்திரன் (12 வயது நாகராசா ராதா (8 வயது) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

---

நம்பிக்கைக்

மேலும் அவர் விடுதலைப் புலிகள் தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு குறிப்பிட்டபடி பவுணை கடன்பத்திரதாரர்களுக்கு மீள வழங்குகின்றனர். இந்நிகழ்வானது விடுதலைப் புலிகள்மீது தமிழ்மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைகள் மேலும்மேலும் வலுவடையும் என்பதை தெளிவாக்குகிறது. இம்மீட்புநிதி தொடர்பாக இதுவரைகாலமும் எமது மக்கள் மீது இருந்து வந்த தப்பான கருத்துக்கள் களையப்பட்டுவிட்டன என்றார்.

மேற்படி மீட்புநிதி தங்களுக்கு மீளக் கிடைத்தது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள் எனக் கேட்டபோது மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது. அதேவேளை இம்மீளளிப்புபவுணை மீண்டும் தமிழீழ விடுதலைக்காக வழங்கத் தயாராக இருக்கிறேன். அதற்கான ஒரு சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்திருக்கிறேன் எனக்கூறினார்.

மேற்படி கடன்பத்திரதாரர்களுக்கான மீளளிப்பு நேற்றுக் காலை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது உடுவில், மானிப்பாய், தெல்லிப்பழை, சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே மீளளிப்புச் செய்யப்பட்டது. [ச]

---

## கலந்துரையாடல்

ஏழாலை பிரதேச சபை உப- அலுவலகத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான கலந்துரையாடல் வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யா/ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடைபெறும். சனசமூக நிலையங்களின் தலைவர்/செயலாளர்களை தவறாது சமூகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது

---

மாவீரர்

பட்டன.

இதேவேளை வீடு, வீதிகள், அலுவலகங்கள் பாடசாலைகள், கோவில் எங்கும் ஒரே ஒளிமயம் மாவீரர் சுடர் ஏற்றி வைப்பதில் மக்கள் மும்முரமாயினர். தொடர்ந்து வீதிகளிலே சனநடமாட்டம் அதிகரித்தது. ஒருவரின் வீட்டை மற்றொருவர் சென்று பார்வையிட்டு வீதி ஓரங்களில் அவலமாகியபடி நின்றனர். பெருமளவில் மக்கள் சைக்கிள்களில் வலம் வந்தனர்.

அரச அலுவலகங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றில் அலுவலகங்கள் 12 மணிவரை காத்துநின்று மாவீரர்களுக்கான அஞ்சலியை செய்தனர். யாழ். அரச செயலகம், மாநகரசபை அலுவலகம், கல்வித் திணைக்களம், தபாலகம், யாழ். பல்கலைக் கழகம், தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலைகள் என யாழ். நகரை அண்டிய அனைத்து முக்கிய இடங்களிலும் மாவீரர் சுடர்கள் தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்ததாக அவற்றை சென்று பார்த்து வந்த நமது நிருபர் தெரிவித்துள்ளார்.

மிகவிசேடமாக கோண்டாவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச்செயலகத்திலும் கலை, பண்பாட்டுப் பிரிவிலும் மற்றும் பல்வேறு பிரதேச செயலகங்களிலும் தீச்சுடர்கள் ஒளியேற்றிய வண்ணம் இருந்ததாகவும் நமது நிருபர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கிராமங்களில் சனசமூக நிலையங்கள், நூல்நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராமியசங்கங்கள், அனைத்திலும் மாவீரர் சுடர் ஏற்றுவதற்கும் அஞ்சலி செய்வதற்குமான ஏற்பாடுகள் நடைபெற்ற வண்ணம் இருந்தது.

இன்று அதிகாலை ஆரம்பமான மாவீரர்நாள் ஆராதனை காலை இரண்டுமணிவரை ஓயாது இருந்ததை அவதானிக்க முடிந்தது. [ச],[கோ]

---

நினைவொலி

ழீழ மாவீரரை ஞாபகப்படுத்தும் மணியோசை எழுந்தது. தொடர்ந்து 12.02 மணிக்கு அனைத்தும் மௌனமாயின. காற்றும் ஒரு கணம் வீசமறந்ததோ என்று எண்ணும் அளவிற்கு எல்லோரும் இரு நிமிடம் மௌனமாயினர்.

இந்த இரு நிமிடங்கள் கழிந்ததும் மாவீரர் சுடர்கள் பிரகாசித்தன.

---

நவம்பர் 27

கள் இடம்பெறும்.

இத்தேசிய விழாவில் தமிழ் மக்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் மக்களுறவு கொள்கை முன்னெடுப் பிரிவினர் தமிழீழ மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

---

## கடல் பாதுகாப்பு வலயம்; அரசு மறுப்பு; முயற்சி தோல்வி

குடாக் கடல் பகுதியில் அமைதி பிரதேசத்தைப் பிரகடனப் படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன இதைத் தொடர்ந்து தீவக இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட குடாக் கடல் கரையோர மீனவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது.

மாதகல், கொட்டடி, நாவாந்துறை, குருநகர், அராலி ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மேற்படி உலர் உணவு வழங்கப்படவிருக்கின்றது.

மேற்படி உலர் உணவு விநியோகத்திற்கான அனுமதி கிடைத்திருப்பது பற்றி நேற்று மாலை கொழும்பில் இருந்து யாழ். அரசாங்க அதிபர் செயலக அத்தியாவசியப் பகுதினருக்கு அறிவித்துள்ளார்.

இவ் விநியோகத்திற்குத் தமக்குத் தேவையான பொருட்களின் கொள் அளவு பற்றிய விபரங்களை சமர்ப்பிக்கும்படி இப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

அதேவேளை ஏனைய பகுதிகளில் இடம்பெயர்ந்து தொழில் இழந்த மீனவர்களிற்கும் மேற்படி உலர் உணவு விநியோகத்தை விஸ்தரிக்கும்படி யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் பதில் செய்தி ஒன்றில் அரசையும் அரச அதிபரையும் கேட்டிருக்கின்றார். (ச)

## பாலுணவு பற்றாக்குறை; நீக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நிலவும் பாலுணவுப் பற்றாக் குறையை நீக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரசாங்க அதிபருக்கும் அத்தியாவசிய சேவைகள் பகுதிக்கும் இங்கு நிலவும் பாலுணவு பற்றாக்குறை பற்றிய அவசர செய்தி ஒன்றை யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக நேற்று அனுப்பி வைத்திருக்கின்றார்

16,000 பெட்டி லக்ரோஜன் (காவ் கிறீம்) 15,000 பெட்டி லக்ரோஜன், (புல் கிறீம்) 15,000 பெட்டி அங்கர் 5,000 பெட்டி நெஸ்பிறே ஆகிய பாலுணவு வகைகளை அடுத்ததாக இங்கு வந்து சேரும் கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு கொழும்பிலிருக்கும் அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இங்கு எடுத்து வரப்படும் பால்மா வகைகள் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக அடிமட்ட விலையில் (கொழும்பு விலையில்) விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. (ச)

## வவுனியா பல்கலைகல்லூரி தனியார் வீட்டில்

(வவுனியா)

வடமாகாண ஒன்றிணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி வவுனியாவில் வைபவரீதியாகக் கடந்த 20 ஆம் திகதி காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காமினி மகாவித்தியாலயத்தில் இயங்க ஏற்பாடாயிருந்த மேற்படி கல்லூரி வாடகைக்கு எடுக்கப்பட்ட வசதியான தனியார் வீட்டில் இயங்குகிறது.

காமினி வித்தியாலயத்தை பல்கலைக்கழகக் கல்லூரிக்கு வழங்க அரசாங்கம் முன் வந்த போதிலும் இராணுவம் இதற்கான அனுமதியை மறுத்துவிட்டது தமிழர் காமினிவித்தியாலயச் சூழலில் நடமாடுவது வவுனியா இராணுவத்திற்கு விருப்பமில்லையாம்.

காமினி வித்தியாலயம் ஆய்வுகூட வசதிகள் உள்ள பள்ளிக்கூடம் என்று தெரிவிக்கப்படுகிறது. கல்லூரியை இங்கு அமைக்க அனுமதி மறுக்கப்பட்டதால் மனையியல் மற்றும் சத்துணவுக் கற்கைநெறி கைவிடப்பட்டுத் தற்போது கணித விஞ்ஞானக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று எமது வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## லஞ்சக் குற்றச் சாட்டு, 13 பொலிசார் கைது

யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறி உரிமையாளர்களிடமிருந்து லஞ்சம் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 13 பொலிசார் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொலிஸ் தலைமை நிலையங்களான மதவாச்சி நர்தாவ வெள்ளம்புவ ஆகிய பரிசோதனை நிலையங்களில் கடமையாற்றும் பொலிசாரே இவ்விதம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## தூதரக அதிகாரி விடுதலை

சீக்கிய தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட ருமேனிய தூதரகத்தின் பொறுப்பதிகாரி லிவியு ராடோ நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இவர் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் வீடு வந்து சேர்ந்ததாக உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான்கூறினார்

---


# நிதர்சனம்

## வெற்றிடம்

1. இசைத் தயாரிப்பாளர் :
   இசைத்துறையில் போதிய அனுபவமும் இசையமைப்பு போன்ற விஷயங்களில் ஆற்றலும் இருத்தல் வேண்டும்.

2. தட்டெழுத்தாளர் (தமிழ்) :
   போதிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 1991-11-30 (சனி காலை 10 மணிக்கு) நிதர்சனம் செயலகத்திற்கு சகல சான்றிதழ்களுடனும் சமுகமளிக்கவும்.

"நிதர்சனம்",
நீப் வீதி,
திருநெல்வேலி. (B/3516)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.